# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073045
C

1. District மாவட்டம் : நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 03/AC/2019 Date: நாள் 13.02.2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 2018 டிசம்பர் மாதத்தில் ஒருநாள் 07.01.2019, 09.01.2019,
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 08.02.2019, 12.02.2019 மற்றும் 13.02.2019 காலை சுமார் 9.30 மணிக்கு
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.02.2019 Time : நேரம் 18.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-I 13.02.2019 Time : நேரம் 18.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி கலைமகள் கல்வி நிலையம், திருச்செங்கோடு. சுமார் 40 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சந்திரசேகரன் (45) (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. முருகேசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.07.1973 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் ஆசிரியர் (g) Address : முகவரி 5-வார்டு, 4/5-1 கிழக்குத்தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம்-Tk, நாமக்கல்-Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. செந்தில் குமார், தலைமை ஆசிரியர், கலைமகள் கல்வி நிலையம்.
அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி, திருச்செங்கோடு

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப் படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 13/02/2019.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 13/2/19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.02.2019, 21.00 மணிக்கு

Name: பெயர் A.T. ஜெய்குமார்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
உ.த.க. பிரிவு, நாமக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

F. Salil (?) HC1N1 13/02/19

**<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2019 u/s 7(b) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...</u>**

இன்று 13.02.2019-ஆம் தேதி புதன்கிழமை மாலை 18.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது திருச்செங்கோடு கலைமகள் கல்வி நிலையம், அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வரும் நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுக்கா, குருசாமிபாளையம் கிழக்குத்தெருவில் வசிக்கும் முருகேசன் என்பவரின் மகன் திரு.M.சந்திரசேகரன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் M.சந்திரசேகரன் (வயது-45), இடைநிலை ஆசிரியர், த/பெ.A.முருகேசன், கதவு எண்.4/5-1 கிழக்குத்தெரு, குருசாமிபாளையம், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம், பெறுநர் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். அய்யா, நான் குருசாமிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2005-ஆம் வருடம் முதல் திருச்செங்கோட்டில் உள்ள கலைமகள் கல்வி நிலையம் அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஒரு வழக்கு சம்பந்தமாக நான் கடந்த 11.01.2016 முதல் 18.4.2018 வரை பணி இடை நீக்கத்தில் இருந்தேன். பின்னர் வழக்கிலிருந்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளேன். அதனால் பள்ளி நிர்வாகத்தால் பணி இடை நீக்கம் ரத்து செய்யப்பட்டு, கடந்த 19.04.2018-ஆம் தேதி மீண்டும் பள்ளியில் பணியில் சேர்ந்தேன். கடந்த நவம்பர் 2018 வரை எனக்கு மாத சம்பளம் வழங்கவில்லை. எனது பணியிடை நீக்க காலத்திற்கு பின் மாவட்ட கல்வி அலுவலரின் ஒப்புதல் கடிதம் கிடைத்த பின்னர் தான் மாத சம்பளம் போட முடியும் என்று சொன்னார்கள். அது தொடர்பாக பள்ளி நிர்வாகத்திற்கும் வட்டார கல்வி அலுவலர், திருச்செங்கோடு அவர்களுக்கும் கடித போக்குவரத்து இருந்து வந்தது. பின்னர் கடந்த 2018 நவம்பர் மாத வாக்கில் மாவட்ட கல்வி அலுவலரிடமிருந்து ஒப்புதல் கடிதம் கிடைக்கப் பெற்றதாக தெரிவித்து 19.04.2018-ம் தேதி முதல் நவம்பர் மாதம் வரைக்கான எனது சம்பள நிலுவைத் தொகைக்கான பில்லை பள்ளி நிர்வாகம்

தயார் செய்து வட்டார கல்வி அலுவலர், திருச்செங்கோடு அவர்களுக்கு அனுப்பினார்கள். அந்த சம்பள பில்லிற்கு ஒப்புதல் வழங்க வட்டார கல்வி அலுவலராக (Block Educational Officer) உள்ள திரு.மாதவன் அவர்கள் ரூ.10,000/- பணம் கேட்பதாக எனது பள்ளி தலைமை ஆசிரியர் S.செந்தில்குமார் என்னிடம் 2018 டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் தெரிவித்தார். அதற்கு நான், என்னிடம் பணம் இல்லை சார் என்று சொன்னேன். சரி சம்பள பில் சேங்சன் ஆகி வந்தவுடன் தந்துவிடு, நான் BEO-விடம் சொல்லி உனது சம்பள பில்லை அனுப்ப சொல்கிறேன் என்று சொன்னார். பின்னர் கடந்த 31.12.2018-இல் டிசம்பர் மாத சம்பளமும், 02.01.2019-ஆம் தேதி எனது சம்பள நிலுவைத் தொகையும் எனது வங்கி கணக்கில் கிடைக்கப் பெற்றது. கடந்த 07.01.2019 மற்றும் 09.01.2019 ஆகிய தேதிகளில் தலைமை ஆசிரியர் S.செந்தில்குமார் என்னிடம் சம்பளம் தான் போட்டாச்சே BEO-விற்கு கொடுக்க வேண்டிய தொகையை கொண்டு வந்து கொடுங்க அவர் கேட்டுக் கொண்டே இருக்கிறார் என்று சொன்னார். நான் நிறைய கடன் இருக்கு அதனால் அடுத்த மாதம் சம்பளம் வந்தவுடன் பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டேன். 06.02.2019-ம் தேதி எனது 2019 ஜனவரி மாத சம்பளம் வங்கி கணக்கில் கிடைக்கப் பெற்றது. கடந்த 08.02.2019-ம் காலை சுமார் 11.00 மணிக்கு எங்களது பள்ளியை பார்வையிட BEO திரு.மாதவன் அவர்கள் வந்திருந்தார். அவர் சென்றவுடன் என்னை அழைத்த தலைமை ஆசிரியர் திரு.செந்தில்குமார் BEO திரு.மாதவன் அவர்கள் கேட்ட பணம் ரூ.10,000/- என்னாச்சு, என்னை வாங்கிக் கொடுக்கச் சொன்னார் என்று என்னிடம் கேட்டார். நான் இந்த மாதம் குடும்ப செலவு நிறைய இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் நான் BEO-விடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். அதன் பின்னர் 12.02.2019-ம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு தலைமை ஆசிரியர் திரு.செந்தில்குமார் அவர்கள் BEO அலுவலகத்திற்கு தலைமை ஆசிரியர்கள் கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றுவிட்டு பள்ளிக்கு வந்துவிட்டு, என்னிடம் BEO மாதவன் அவர்கள் உங்களுக்கு சம்பள நிலுவை பில் அனுப்பியதற்காக கேட்ட 10,000/- ரூபாய் பற்றி கேட்டார், நான் உங்கள் குடும்ப நிலைமையை அவரிடம் சொன்னேன், அவர் தற்போதைக்கு ரூ.5,000/- மட்டும் வாங்கிக் கொடுங்கள், மீதி 5000/- ரூபாயை பிறகு வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னார், அதனால் நாளைக்கு நீங்க 5000 ரூபாய் பணத்தை கொண்டு வந்து கொடுங்க, நானே அவரிடம் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். இன்று 13.02.2019-ம் தேதி காலை சுமார் 9.30 மணிக்கு என்னிடம் மீண்டும் BEO கேட்ட பணம் குறித்து கேட்டார். நான் எனது

A.T.M. கார்டு வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நாளைக்கு நீங்க பணத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுங்க நான் BEO-விடம் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். எனக்கு திருச்செங்கோடு வட்டார கல்வி அலுவலர் திரு.மாதவன் அவர்களுக்கு எனது சம்பள நிலுவைத்தொகை பில்லிற்கு ஒப்புதல் அளித்ததற்கு அவர் கையூட்டாக கேட்கும் பணம் ரூ.5,000/-ஐ தலைமையாசிரியர் திரு.செந்தில்குமார் அவர்கள் மூலம் லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே பணம் ரூ.5,000/- உடன் தலைமையாசிரியர் திரு.செந்தில்குமார் அவர்களை நாளை சந்திக்க உள்ளேன். எனவே சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) மு.சந்திரசேகரன், 13.02.2019.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 13.02.2019-ஆம் தேதி மாலை 19.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2019, u/s 7(b) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

13/02/19

(A.T. ஜெய் குமார்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.